# விளம்பரம்™
VLAMBARAM™

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 13 MAY 01, 2003 பாலம் 09



வீடு விற்க,வாங்க...

Raja M. Mahendran, P. Eng.
(Vice president/Sales Rep.)



எமது நிறுவனத்தில் தொழில் புரிய வீட்டு, வியாபார பிரதிநிதிகள் தேவைப்படுகிறார்கள்.

Direct: 416.315-9397
OFFICE: 416.321-6969


## செய்யும் தொழிலில், வெற்றி பெற

முன்பே எழுதியிருக்கிறேன், மீண்டும் மீண்டும் பலரும் அதே கேள்வியைக் கேட்கின்றனர்.

அந்தக் கேள்வி: "விற்பனையை அதிகரிப்பது எப்படி?" விற்பனையே செய்யும் தொழிலின் அடித்தளம். விற்பனை படுத்தால் வியாபாரத்தை இழுத்து மூட வேண்டிய சூழ்நிலை வரலாம். எனவே இந்தக் கட்டுரைத் தொடரில் இந்த இதழிலில் விற்பனையை அதிகரிக்க என நான்கு பொது விதிகளைக் கூறுகின்றோம். இந்தப் பொது விதிகள் எல்லாத் தொழில்களுக்கும் எல்லா நேரங்களிலும் பொருந்தும். இது தவிர அவரவர் சூழ்நிலைக்கு ஏற்ற தனி நிலைகளையும் நாம் ஆராய வேண்டும். இப்போது நான்கு பொது விதிகளைப் பார்போம்.

**விதி 1:** தரமான பொருளை நியாயமான விலைக்கு விற்கவும்.


**விதி 2:** உங்கள் கவனத்தை வாடிக்கையாளரை விட்டு ஒரு போதும் திருப்பாதீர்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வாடிக்கையாளரைப் பாராட்டுங்கள்.

**விதி 3:** மேலும் வியாபாரத்தை அதிகரிக்க என்ன செய்யலாம் என்று வாடிக்கையாளர்களை எப்போதும் கேளுங்கள்.

**விதி 4:** வெற்றிக்குத் தொடர்கல்வி அவசியம். எனவே உங்களைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள ஆர்வமுடன் நேரத்தை ஒதுக்கிச் செயல்படுங்கள். (கல்வி என்றால் பாடசாலைப் படிப்பு என்று பொருள் அல்ல; நல்ல நூல்களும், செய்தித்தாள்களும் கூட இதில் அடங்கும்) இனி இந்த விதிகளின் விரிவை உண்மைச் சம்பவங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

"கொடுக்கின்ற தெய்வம் கூரையை பிய்த்துக் கொண்டு கொடுக்கும்" என்று பழமொழி வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் நடைமுறையில் நாம் அத்தகைய சம்பவங்களைச் சந்திப்பது அரிதினும் அரிதாகவே உள்ளது.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)



## சார்ஸ் (SARS)
## (Sever Respiratory Acute Syndrome)

இப்பொழுது கனடாவில் கடந்த சில வாரங்களாக சார்ஸ் (SARS) என்ற தொற்றுவியாதி பரவியுள்ளது. பலர் இந்த வியாதியிலிருந்து மீண்டு கொண்டு இருந்தாலும் நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என ஒன்ராரியோ ஆரோக்கியத்திற்கு பொறுபான நிறுவனம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது. அதற்குரிய முன் கவனங்கள் எடுப்பதில் மிக அககறையாக இருக்கவேண்டும் என மக்களைக் கோட்டுக்கொள்கின்றது. நாம் சில நடவடிக்கைகளை மேற்கொண்டால் இந்தக் கொடிய, கண்டுபிடிக்க முடியாத வியாதியிலிருந்து எம்மைப் பாதுகாப்பது மட்டுமன்றி எமக்கு வேண்டியவர்களையும் அயலவர்களையும் மற்றவர்களையும் பாதுகாக்கலாம் எனக் கூறுகின்றது இந்நிறுவனம்.

**சார்ஸ் இன் அறிகுறிகள்**

குறிப்பு: சார்ஸ் ஒருவரிலிருந்து மற்றவரிற்கு பரவினால் பரவப்பட்ட நாளிலிருந்து பத்து நாட்களிற்கு மற்றவர்களிற்கு அந்த வியாதி ஏற்படலாம் எனக் கூறப்படுகிறது.

1. Muscle Aches & Pains
2. Severe Fatigue
3. தலையிடி
4. இருமல் (Dry)
5. சுவாசிப்பதில் கஸ்டம்

**வீட்டில் தனிமைப்படுத்தல் என்றால் என்ன?**

தனிமைப்படுத்தல் என்பது வீட்டினுள் தனிமையாக ஒதுக்கப்பட்டிருத்தல். (ஆங்கிலத்தில் Quarantine என அழைப்பர்)

ஒருவரை தனிமைப்படுத்தக் கேட்டிருந்தால் 1 888 668 4636 என்னும்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## அருள்விருந்து

* உயிர்கள் அனைத்தும் கடவுளிடத்திலிருந்த வந்துள்ளவை என்று அறிந்து அவைகளை நேசிப்பதே நல்ல நேசமாகும்.
* மனிதன் செய்யும் வேலைகளுள் உயர்ந்த எண்ணம் எண்ணுவது எண்ணும் வேலையே மிகக் கடினமானது.
* ஆத்ம சாதனம் ஆழ்ந்து பண்ணுபவர்க்குப் பழைய வினையின் கட்டுதானே அவிழ்ந்து போய்விடுகிறது.


Since 1987

வசந்தா நகை மாளிகை

வசந்தன் - பத்மநாதன்
பத்தர்களின் கைவண்ணத்தில்
தங்கத்தின் புதிய வடிவங்கள்!

Tel: 905 848 5151
OPEN 10:30AM - 8:30PM

Fax: 905 848 8502
MONDAY CLOSED

3025 Hurontario St., Unit. 103A, Mississauga

Singapore Communication

UNLIMITED TALKING*
only $40.00 / m
• 350 Mins Daytime Free • Evenings & Weekends Free
$30.00 / M
• 100 Mins Daytime Free • Evenings & Weekends Free
• V/M, C/D*, C/C & C/W FREE • Lunch Hour (12-1pm)

HURRY ALL PROMOTION ENDS THIS MONTH
OFFICE: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17ABC - (Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா -கொழும்புச்
சுற்றுப் புறங்களுக்கும் -
சிங்கப்பூர் - சென்னை
ஆகிய இடங்களுக்கும்
கடுகதியில் பணம்
அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro., ON.



Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)

• Auto
• Home
• R.R.S.P
• Life
• Disability
• Mutual Fund
• Group Insurance
• Child Education
• Travel & Business

416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

FAMILY MEDICAL CENTRE



DR. D. KURUNATHAN
(MBBS, MD, CCFP)
Female Family Physician
Tel: 416.293.7700
880 Ellesmere Rd., #201, Scarborough, ON HOPPER HUT இற்கு அருகாமையில்



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD, TORONTO, ON M1B 5P9, CANADA TEL: (416) 282-8059, FAX: (416) 282-4978 e-mail: vlambaram@sympatico.ca

# செய்யும் தொழிலில், வெற்றி பெற



உங்களிடம் யாரும் தானாக வந்து உங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டும் என்று கேட்டு, உங்களுக்கு வேண்டிய பணத்தையெல்லாம் தரப் போவதில்லை. மக்கள் உங்களிடம் பணத்தைக் கொடுப்பதற்குத் தகுந்த காரணம் வேண்டும். பதிலுக்கு நீங்கள் என்ன கொடுக்கப் போறீர்கள்? தரமான பொருளா? சேவையா? உங்கள் விலை போட்டியாளரின் விலையுடன் ஒப்பிடக் கூடியதா? உங்கள் பொருளை வாங்கும் போது வாடிக்கையாளரின் மனநிறைவு எவ்வாறு உள்ளது? விலை ஒருபுறம், திருப்தி மறுபுறம். விலை மட்டுமே திருப்திக்கான காரணம் ஆகாது. சில சமயங்களில் விலை சற்று கூடுதலாக இருந்தாலும், தான் கொடுக்கும் பணத்துக்குத் தகுந்த மதிப்பைப் பெறுகிறோம் என்ற உணர்வு வாடிக்கையாளர் மத்தியில் ஏற்படும் போது விற்பனை அதிகரிக்கவே செய்கின்றது. ஆங்கிலத்தில் இதை "perceived" value என்பார்கள். இதை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்குவோம். ஒரு கணினி (computer) விற்பனையாளர் 24 மணிநேர உதவித் தொலைபேசி சேவையைத் தருகிறார் எனக் கொள்வோம். அது வாடிக்கையாளர்களுக்கு குறிப்பாக முதல் முறை கணினி வாங்குவோருக்கு- தன்னம்பிக்கையையும், ஒரு பாதுகாப்பான உணர்வையும் தருகின்றது. இதையே முன்னர் "கொடுக்கும் பணத்துக்கான தகுந்த மதிப்பு" என்று குறிப்பிட்டோம். இத்தகைய 24 மணிநேர சேவையை விற்பனையை அதிகரிக்கச் செய்யும் விளம்பரமாகவும் பயன்படுத்தலாம். ஆனாலும் அதற்காக யாரும் விடிகாலை 4மணிக்கு பிரச்சனையோடு தொலைபேசியில் அழைக்கப்போவதில்லை.(அப்படி அழைத்து விட்டால் சேவை செய்யத் தயாராக இருக்க வேண்டும்). இத்தகைய சேவைகளுக்காக வாடிக்கையாளர்கள் சற்றே விலை கூட்க்கொடுக்கவும் தயாராகவே உள்ளனர்.


உண்மையில் 1997ல் சில்லறை கனடாக்குழு (retail council of canada) செய்த ஆய்வுகளின் படி பொருள்களை விலையின் அடிப்படையில் அதிகம் என்று கூறி வாங்காதவர்கள் 33% பேர் தான். பொருள்களின் விற்பனையைத் தீர்மானிப்பது வரிசைக்கிரமமாக இந்த ஆய்வின்படி (1) சௌகரியம் (convenience) (2) பணம் கொடுப்பதில் உள்ள வசதி (ease of payment) (3) வாடிக்கையாளர் சேவை (customer service) கடைசியாக (4) விலை(price). எனவே தரமான பொருளை நியாயமான விலைக்கு விற்பது என்பது வியாபாரத்தைப் பெருக்கும் நல்ல உத்தியாகும். ஆனால் விலை மட்டுமே விற்பனையைத் தீர்மானிப்பதில்லை என்பதையும் விற்பனையாளர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## பெரி. முத்துராமன்

அடுத்த விதி பற்றிப் பார்ப்போம்.

வாடிக்கையாளர் வாடிக்கையாளர் வாடிக்கையாளர்
வாடிக்கையாளரே வியாபாரம்
வியாபாரமே வாடிக்கையாளர்

உங்கள் கவனத்தை அவர்மேலிருந்தும் சற்றும் திருப்பாதீர்கள். அவர் திருப்திப் படுகிறாரா? அவரைத் திருப்திப்படுத்துவதே உங்கள் நோக்கம். எந்த வியாபாரத்திலும் 80 சதவீத விற்பனையை சுமார் 20சத வாடிக்கையாளர்களே தருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக உங்கள் கவனத்தை அந்த 20 சதவீத வாடிக்கையாளர் மேல் எப்போதும் வைத்திருங்கள்.




உங்கள் வாடிக்கையாளருக்கு என்ன தேவை? அவர்கள் தேவையை நீங்கள் எவ்வாறு பூர்த்தி செய்யலாம்? இத்தகைய சிந்தனையிலும் செயலிலுமே உங்கள் வியாபாரத்தின் வெற்றி அடங்கியுள்ளது. வியாபாரம் என்பது வாடிக்கையாளரின் தேவையை அறிந்து அதைப் பூர்த்தி செய்வதே.

விற்பனையாளர், வாடிக்கையாளர்களின் மாறும் மனப் போக்கைத் துல்லியமாக அறிந்தால், வெற்றிக்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. அமெரிக்காவில் சியாட்டல்(seatle) நகரில் ஆகா (ahhhh gift & shop) பரிசுப் பொருள் கடை ஒன்று உள்ளது. இந்தக் கடையின் வருவாய் பத்து ஆண்டுகளில் பத்துமடங்காக அதிகிரித்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன. 1990 $100,000 ஆக இருந்த வருவாய் பத்து ஆண்டுகளில் 1 மில்லியன் டொலரைக் கடந்து விட்டதாம். இந்த வெற்றியின் இரகசியம் என்ன? கடை உரிமையாளர் சூபர் சொல்வதைக் கேட்போம். "எங்கள் வெற்றிக்கான காரணம் : எங்களால் எங்கள் வாடிக்கையாளரின் மாறும் தேவைகளை முன்கூட்டியே துல்லியமாக உணர முடிவதே. இதற்காக டன் கணக்கில் நாங்கள் சர்வே எடுக்கின்றோம். எங்கள் வாடிக்கையாளர்களிடம் 25 கேள்விகள் நிறைந்த சர்வேயே அவ்வப்போது தருகின்றோம். அதைப் பூர்த்தி செய்து தரும் வாடிக்கையாளர்களுக்கு, எங்களின் அன்புப் பரிசாக $5 டாலர் பரிசுப் பத்திரம் ஒன்றை வழங்குகின்றோம். அந்தப் பரிசுப் பத்திரத்தை வாடிக்கையாளர் அடுத்த முறை பொருள்கள் வாங்கும் போது மாற்றிக் கொள்ளலாம். வாடிக்கையாளருக்கு நாங்கள் $5 பரிசுப் பத்திரத்தைக் கொடுக்கும் போது, அவர் கருத்தோடு, அவரின் விலாசத்தையும் எங்களிடம் தருகிறார். இன்றைக்கு எங்களிடம் அத்தகைய முதல் தரமான விலாசங்கள் 10,000க்கும் அதிகமாக உள்ளன. அவர்கள் இரசனைக்கு ஏற்ப, அவ்வப்போது அவர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களுக்குப் பிடித்த விற்பனைப் பொருள்களைப் பற்றியும் தகவல் தருகின்றோம். வாடிக்கையாளர் விரும்பாத பொருட்கள் அவ்வவ்போது இத்தகைய முறையில் எங்கள் கடையிலிருந்து நீக்கப்பட்டு விரும்பும் புதிய பொருட்கள் விற்பனைக்குச் சேர்க்கப்படும்" "பல வாடிக்கையாளர்கள், இந்தச் சர்வேயின் போது எங்களைப் பற்றி மிக நல்ல முறையில் எழுதுவார்கள். அவற்றை, அந்த வாடிக்கையாளரின் அனுமதி பெற்று எங்கள் விளம்பரத்துக்கும் நாங்கள் பயன்படுத்துவதும் உண்டு.


கடன்கொடுக்கலாம்! வாங்கலாம்!
Mortgage/loans/line of Credit

* வீடு, வியாபாரம், சுயதொழில் - கடன் பெறலாம்.
* Down Payment ஒரு பிரச்சினையா? தயங்காதீர்கள்.
* 2nd, 3rd மோட்கேஜை - ஒன்றாக்கலாம்.






தொடர்புகளிற்கு:- ஜோஜ் பரந்தாமன்
416-332-0933

* வித்தியாசம் அறிய என்னுடனும் தொடர்பு கொள்ளலாம்*.


**வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாக தரவும்.**


AVIS. RENT A CAR



Main & Danforth
2575 Danforth Avenue
Tel: 416 691 3113

1345 Lawrence Ave E
(Victoria Park & Lawrence)
Tel: 416 441 1818

4352 Kingston Road
(Kingston & Lawrence)
Tel: 416 724 2847

1910 Yonge Street
(Yonge & Davisville)
Tel: 416 932 2847

avis.com


உங்கள் தொழிலில் நீங்கள் வெற்றி பெற்றவரா? சொல்ல நீங்கள் தயாரா? உங்கள் வெற்றி மேலும் பலருக்கு முன் உதாரணமாக அமையலாம். உங்கள் வெற்றிச் செய்தியைக் கேட்க நாங்கள் விரும்புகிறோம். அப்படியானால் இக் கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் தொழிலில் உங்கள் நேரத்தையும் பொருளையும் சேமிக்க, இலாபத்தை அதிகரிக்க, ஆலோசனைகளுக்கும், மறு ஆலோசனைகளுக்கும் திரு. பெரி. முத்துராமனுடன் தொடர்பு கொள்ளுங்கள். இவருடைய Success Biz Solution நிறுவனத்தின் வாயிலாக பல தொழில் முனைவர்கள் பயன் அடைந்து வருகிறார்கள். நீங்களும், இன்றே பயன் அடைய இப்போதே 416 430 0623 அல்லது (C) 416 278 2026 இல் தொடர்புகொள்ளுங்கள்.

பெரி. முத்துராமன் MBA, M.Com பட்டம் பெற்றவர். இந்தியாவிலும், கனடாவிலும் சிறுதொழில் வளர்ச்சியோடு தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொண்டவர். இவருடைய கட்டுரைகள் இந்தியாவில் Financial Express, Economic Times, Hindu Businesslime மற்றும் ரொறன்ரோவில் வெளிவரும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

* Detailing
* Motor Shampoo
* Interior Shampoo
* Exterior Wash
* Waxing

* Repairs
* Safety Certification
* Overall Maintenance
* Under Coating
* Rust Proofing

**416-285-4998**
**435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6**

SPECIAL



எஸ். எம். தனபாலனின் ***"கரைதேடும் அலைகள்"*** வெற்றித் திரைப்படத்தை கனடிய மண்ணில் தயாரித்து வழங்கிய "பாக்யா புரடக்ஸனும்" "எஸ். வி. புரடக்ஸன்" நிறுவனத்தினரும் TVN தொலைக்காட்சிக்கென "சலனங்கள்" எனும் புதிய மெகா தொடர்ஒன்றை தயாரிக்க இருக்கின்றனர். மெகாதொடரில் நடிப்பதற்கு கலையார்வம் கொண்ட கலைஞர்கள் (16 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும்) இணைத்துக் கொள்ளப்படவிருக்கின்றனர். ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் அல்லது மின்னஞ்சலூடாக தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகட்கு:- மாதன். 416-289–6114,
www.smthana23@hotmail.com, www.maravan4@hotmail.com

# இரத்த தானம் பற்றிய அறிவித்தல்

எதிர்வரும் மே மாதம் 24ம் திகதி, 25ம் திகதிகளில் Keele & Sheppard சந்திப்பில் அமைந்துள்ள Downsview Park னுள் நடைபெற உள்ள செந்தியின் வர்த்தகச்சோலை எனும் வர்த்தக கண்காட்சியில் இரத்த தானம் செய்ய விரும்புவோர் உங்கள் பெயர், தொலைபேசி இலக்கங்களை முன்கூட்டியே பதிவு செய்யுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

மேலதிக தொடர்புகளிற்கு: ஆதவன் பப்ளிக்கேசன்ஸ் **416-615-4646**

# இணுவில் திருவூர் ஒன்றியம்

**அறிவித்தல்**

இணுவில் மக்களின் பிள்ளைகள் மத்தியில் தமிழ்மொழித் திறனையும் சமய அறிவையையும் வளர்க்கு முகமாக தமிழ் மொழியில் பேச்சு, எழுத்து, வாசிப்பு மற்றும் பண்ணிசைப் போட்டிகள் நடத்தப்பவுள்ளது. இப்போட்டிகள் வயது அடிப்படையில் 5 பிரிவுகளாக இடம்பெறும்.

**இடம்** :- Malvern Presbuterian Phurch, 1301 Neilson Rd & Sewels Rd, Scarborought


**காலம்** :- யூன் 7, 2003 (சனிக்கிழமை) **நேரம்** :- காலை 9.00 மணி

**மேலதிக விபரங்களுக்கு:-** த. சிறி 416-439-6039, மு.கிருபா 416-430-0422, சோ. சிவநாயகம் 416-754-7402 லோ. தயா (905) 201-8698, க.அருட்சோதி 416-284-7435

**விண்ணப்ப முடிவுத்திகதி 31-05-2003**

**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**


# INCOME TAX


Tarsem Parmar

* **Incorporation**
* **Business Set-up & Registration**
* **Accounting & Bookkeeping**
* **Payroll, G.S.T. & P.S.T.**
* **Incomes Taxes** (Free E-File)
* **CCRA Audit and Appeals**

# FINANCIAL SERVICES



* **Mortgages**
  upto 1.5% below the bank posted rates
* **Lines of Credit**
* **Business Loans**
* **Personal Loans**

## PERMANENT RESIDENT CARDS

**Free Applications filled for Seniors for PR Cards**
**Special Discounted rates to Taxi/Truck Operators, Serving the community since 1992**

Scarborough & Markham Area
416-937-1563
2 Irenemount Cres., Markham
(Markham Rd./Steeles Ave.)

Brampton
416-937-1563
8 Strathearn Ave., Unit 1
(Dixie/Steeles)



# ACTION HONDA

*"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"*



புதிய பழைய HONDA வாகனங்களை
ஈழத்தமிழ் மகன் **சோதீஸ்**
இடம் பெறும்போது

* சிறந்த சேவை
* Life time Oil change
* மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.




THIS MONTH SPECIAL

APRIL CLEARNCE
ALL NEW & USED CAR ON BOTTOM PRICE

**416-704-1179**

அலுவலக நேரம்
Mon, Fri, Sat: 9 am - 6 pm
Tues, Wed: 12 noon - 9 pm
4334 Kingston Rd, Scarborough





# அன்புத் தமிழ்

## புலவர் தொழில்

கடந்த இதழ் தொடர்ச்சி

கவிஞர்களும் கவிதைத் தொழிலால் மிகு தொண்டர்களே. நாட்டுக்கு உழைக்க வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கு புலவர்கள் மத்தியில் இயல்பாக இருந்து வந்ததை வரலாற்று வகையாலும் நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

பாரி மன்னனின் நாட்டை மூவேந்தர் முற்றுகையிட்டுக் கைப்பற்றிக் கொண்டனர். பாரி இறந்த பின்னர் ஆதரவற்ற அவனது பெண்மக்களைப் பாதுகாத்தார் கபிலர் என்ற புலவர். நெடுங்கிள்ளி நாட்டில் இல்லாத சமயத்தில் அவனது ஊரை நலங்கிள்ளி முற்றுகையிட்டான். அதனை அறிந்த கோவூர்கிழார் நலங்கிள்ளிக்கு அறிவுரை கூறிச் சமாதானத்தை ஏற்படுத்தினார்.

கோவூர்கிழார் இமைப்பொழுதும் சோராதிருந்த இயல்புடையவராகக் காணப்படுகின்றார். அஞ்சா நெஞ்சுடைய இவர் அரசியலில் மிகுந்த துணிவுடன் ஈடுபட்ட சம்பவங்கள் புலவருடைய பீடுறு வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. மலையமான் என்றொரு மன்னன். பெண்ணை ஆறு வளஞ்செய்த மலையமானாட்டின் அரசன். பெருங்கொடை வள்ளல். கடையெழு வள்ளல்களில் ஒருவன். போர்த்துறையிலும் வல்லவன். இவனது குதிரைக்குக் காரி என்ற பெயர். 'காரியூர்ந்து பேரமர் கடந்த மாரி ஈகை மறப்போர் மலையன்' என்று பெருஞ்சித்தரனார் என்ற புலவர் இவனைப் பாராட்டியிருக்கின்றார். அத்தகைய சிறப்பு மிகுந்த மன்னனின் மக்களை யானையைக் கொண்டு கொல்ல முயன்றான் அவனது பகைவனாகிய சோழன் கிள்ளிவளவன். கேள்வியுற்ற கோவூர்கிழார் தானுண்டு தன்பாடுண்டு என்று வாழாவிருக்கவில்லை. தந்தைமீதுதுற்ற கோபத்தை பிள்ளைகள் மீது காட்டுவதா? விலங்குகள் தாமும் செய்யா அலங்கோலத்தை நாட்டைக் காக்கும் அரசன் செய்வதா? பொறுப்பினை உணர்ந்த புலவர், குழந்தைகள் கொல்லபபடுவதை நிறுத்த விழைந்து கிள்ளிவளவனை அடைந்தார். கோபக் கனல் பொங்க நின்ற வேந்தனைக் குளிப்பாட்டுகின்றார் அறிவுனைகளால்:

*நீயே புறவின் அல்லல் அன்றியும் பிறவும்*
*இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை*
*இவரே புலன் உழுது உண்மார் புன்கண் அஞ்சித*
*தமதுபகுத் துண்ணும் தண்ணிழல் வாழ்நர்*
*களிறுண்டு அழூஉ மழாஅன் மறந்த*
*புன்தலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி*
*விருந்திற் புன்கணோ வுடையர்*
*கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே.* (புறம் 46)

"நீயோ புறாவின் துன்பம் அன்றியும் பிறவற்றின் இடர்களையும் தீர்த்த சோழன் சிபிச் சக்கரவர்த்தியின் மரபில் வந்தவன். நீ கொல்லக் கருதும் இம் மக்களோ அறிவால் உழுது உண்ணும் கற்றோரது வறுமையை நீக்க வாரி வழங்கிய கருணை உள்ளம் படைத்த மன்னர் மரபினர். முன்பு அழுதுகொண்டு நின்றவர் யானையைக் கண்டதும் அதிசயித்து அழுகை நிறுத்திவிட்டனர். அத்தகைய அறியாப் பருவத்தினராகிய இவர் உன்சீற்றம் நோக்கி மருண்டு புதிய கவலைக்குள்ளாகி இருக்கின்றனர். சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். இனி நீ விரும்பியதைச் செய்வாயாக' என்று அஞ்சாது மன்னனுக்கு அறிவுரை கூறுகின்றார் புலவர்.

இப்பாடலில் 'புலன் உழுது உண்மார் புன்கண்' எனவரும் தொடர் கவனிக்கத் தக்கது. கோவூர்கிழார் 'அறிவால் உழுது உண்ணும் புலவர்களது வறுமையைப் போக்கியவன் மலையமான்' என்கிறார். அறிவால் உழுது உண்பது புலவர்களது தொழில். ஆயின் உழுதலாகிய அத் தொழில் போதிய விளைச்சலைத் தராதவிடத்து வறுமை வந்துவிடுகின்றது. வறுமையைப் போக்க வள்ளல்களை நாடிச் சென்று பொருள் பெற்று வருவதும் அக்காலத்துப் புலவர் தொழிலாகும்.

அவ்விதம் பொருளைக் கேட்கும் பொழுது புலவர்கள் தமது பெருமைக்குப் பங்கம் ஏற்படா வகை மிகக் கவனமாக நடந்துகொள்வர். கடையெழு வள்ளல்களில் ஒருவராகிய வல்வில் ஓரியிடம் கழைதின்யானையார் சென்று 'ஓரி, நீ வாழ்வாயாக! மழைபோல எவர்க்கும் எப்பொருளையும் வரையாது வழங்கும் வண்மையுடையோய், ஈயென்று கேட்டு இரத்தல் இழிந்தது. ஈயேன் என்று சொல்லி மறுத்தல் அதனினும் இழிந்தது. இரக்குமுன் குறிப்பு உணர்ந்து இதோ பெற்றுக்கொள் என்று கொடுத்தல் உயர்ந்தது. அதனைக் கொள்ளாது விடல் அக்கொடையினும் உயர்ந்தது. தண்ணீர் குடிப்பதற்குப் பெரிய கடல்நீரை நோக்கி ஒருவரும் செல்வதில்லை. பசுக்களும் குதிரைகளும் உண்ணு வதால் கலங்கிச் சேறுபட்டிருப்பினும், உண்ணத் தகுந்த நீர் நிலையங்களைத் தேடிய எல்லோரும் செல்வர். அவற்றுக்குச் செல்லும் வழிகளும் பலவாம். பரிசிலர் பரிசு பெறாவிடத்து, தாம் புறப்பட்ட புள் நிமித்தத்தையும் பொழுதையும் குறைகூறுவரேயன்றி, பரிசு வழங்காதவரை ஒரு போதும் பழியார். அதனால் நீ எனக்குக் கொடாது போயினும் உன்னை வெறுக்க மாட்டேன்' (புறம் 204) என்று பொருள் கேட்கும் விதம் புலவர்களுக்கேயுரிய நாகரிகம் கலந்த நயப் பாட்டுக்கு உதாரணமாக விளங்குகின்றது.

இவ்விதம் தாம் பெற்ற பொருளைத் தாமே அனுபவிக்க வேண்டும் என்னும் குறுகிய நோக்கமின்றி எல்லோர்க்கும் கொடுத்து இன்புற்றிருக்கும் இயல்புடையது புலவர்களது வாழ்க்கை. பெருஞ்சித்தரனார் குமணவள்ளலைப் பாடி பெற்ற பரிசிலைத் தமது மனைவியிடம் கொடுத்துப் பின்வருமாறு சொல்லுகின்றார்:

## கவிஞர் வி. கந்தவனம்

*நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்*
*பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்*
*கடும்பின் கடும்பசி தீர யாழநின்*
*நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்*
*இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது*
*வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்*
*எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே*
*பழந் தூங்கு முதிரத்துக் கிழவன்*
*திருந்துவேற் குமணன் நல்கிய வளனே.* (புறம் 163)

'எனது மனைக்கு உரியவளே, பழமரங்கள் நிறைந்த முதிரமலைக்குத் தலைவனாகிய திருந்திய வேலையுடைய குமணன் வழங்கிய செல்வம் இது. இதனை உன்னைச் சார்ந்தவருக்கும் உனக்கு வேண்டியவருக்கும் பலவகையிலும் சிறப்பு வாய்ந்த கற்பினையுடைய உனது சுற்றத்து முதுமகளிர்க்கும் நமது சுற்றத்தினது கடும் பசியைப் போக்க உனக்குக் கடன் தந்து உதவியோர்க்கும் மற்றும் இன்னார் இனியார் என்று பாராது, என்னுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்றும் நினையாது, இதனை வைத்துக்கொண்டு நாமே நல்லவண்ணம் வாழ்வோம் என்றும் கருதாது எல்லோர்க்கும் கொடுத்து வாழ்வாயாக' என்பது இதன் பொருள்.

பெருஞ்சித்தரனாரின் பெருங்குணம் தான் பெற்ற இன்பம் பிறரும் பெறவேண்டும் என்பது. கொடுக்கின்ற விடயத்தில் தன்னுடன் கலந்து ஆலோசிக்க வேண்டியதில்லை என்று அவர் மனைவிக்கு உரைப்பது அவரது உயர்ந்த உள்ளத்தைக் காட்டுகின்றது. அத்துடன் பெண்ணுக்கு அவர் அன்று கொடுத்த உரிமையையும் இன்றைய ஆண்கள் கவனித்தல் வேண்டும்.

இவ்விதம் உவப்பத் தலைக்கூடுதல், உள்ளப் பிரிதல், ஊருக்கு உழைத்தல், வல்லாங்கு பாடிப் பரிசில் பெறுதல், பெற்றது மகிழ்ந்து பகுத்துண்டு பல்லோரையும் ஓம்புதல், பீடுற வாழ்தல் ஆகியன புலவர் தொழில்களாக அன்று அமைந்திருந்தன. இன்றைய புலவர் வாழ்க்கையினை ஆராயினும் இவ்வியல்புகள் இருப்பதை அறியமுடியும்.

# சார்ஸ் (SARS)

1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுதல் நல்லது. அல்லது www.sars.gc.ca இணையத்தளத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

குறைந்தது 10 நாட்கள் தனிமையாக இருத்தல் வேண்டும். இவ்வாறு தனிமைப்பட்டு இருப்பதால் மற்றவர்களையும் பாதுகாத்த பெருமையும் அவர்களிற்கு உண்டு.

**சார்ஸ் என்றால் என்ன?**
காய்சலுடன் கூடிய நிமோனியாவின் மிகக் கூடிய நிலை. குறிப்பிட்ட சிறு பகுதியினர் இதனால் மிகவும் பாதிக்கப்படுவார்கள்.

**எப்படி பரவப்படுகின்றது?**
இந்த நோயினால் பாதிக்கப்பட்டவருடன் நேரடியாக தொடர்பு கொண்டால், நோய் வாய்பட்டவர் இருமுவதால் அல்லது தும்முவதால் பரவப்படுகிறது என எண்ணப்படுகிறது.

சார்ஸ் இனால் பாதிக்கப்பட்டவர் எவ்வாறு கண்காணிக்கப்படுகிறார்?
தனிமைப்படுத்தப்பட்டு antibiotics மற்றும் antiviraL வழங்கப்படுகின்றது. அவதானமாக உதவிகள் செய்யப்படுவதன் மூலம் நோயிலிருந்து கண்காணிக்கப்படுவதுடன் நோயிலிருந்து மீளச் செய்யப்படுகிறார்கள்.

**குறிப்பு**
1. சீனா, கொங்கொங், சிங்கப்பூர், வியட்நாம், தாய்வான் போன்ற நாடுகளிற்கு சென்றிருத்தால் தொடர்ந்து வரும் 10 நாட்களிற்கு தனிமைப்பட்டிருத்தல் நல்லது.
2. சார்ஸ் தொற்றுநோய்க்கு முகம் கொடுக்காமல் இருந்தால் வாய்மூடி (Mask) அணியவேண்டிய அவசியம் இல்லை எனக் கூறப்படுகிறது.
3. சார்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தவருடன் தொடர்புகொண்டால் 10நாட்களிற்கு தனிமைப் பட்டிருத்தல் நல்லது.



**தனிமைப்பட்டிருக்கும் போது செய்ய வேண்டியவை**
1. வீட்டில் தொடர்ந்து இருத்தல்
2. வேறு ஒருவரையும் வீட்டிற்கு வருவதை தடை செய்தல்.
3. வீட்டில் வேறு ஒருவருடன் தொடர்பு கொள்ளும்போது வாய்மூடி அணிதல் வேண்டும்
4. வைத்தியசாலையில் கூறியபடி வாய்மூடியை மாற்றுதல் வேண்டும்.
5. வீட்டுப்பொருட்களை மற்றவர்களுடன் சேர்ந்து உபயோகிப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.
6. கைகளை அடிக்கடி கழுவுதல் வேண்டும்.
7. தனிமையில் தூங்குதல் வேண்டும்.
8. உடம்பு வெப்பநிலையை குறைந்தது நாளிற்கு இருதடவை எடுத்தல் வேண்டும். (தனியான வெப்பமானி பாவிக்கவேண்டும்.)
9. வீட்டில் இருக்கும் ஒருவருடைய உடம்பு வெப்பநிலை 38˚ யை விட அதிகரித்திருந்தால் 1 866 797 000 என்ற எண்ணுடன் தொடர்புகொள்ளவேண்டும்.
10. குறைந்தது 10 நாட்களிற்கு முன்பாக வீட்டிலிருந்து வருவதைத் தவிர்க்க வேண்டும்.


LARGE INDOOR PUBLIC CAR AUCTION

EVERY WEDNESDAY EVENING
STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM

100+ VEHICLES ON DISPLAY INDOORS

INCLUDE MANY LATE MODEL
> G.M. > FORD
> CHRYSLER > HONDA
> NISSAN > TOYOTA
>V.W., & OTHER FOREIGN
& DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

WEEKLY CASH BUYERS DRAWS OPEN
MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM
FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM

1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ONTARIO.

CIA PUBLIC AUTO AUCTION & SALES
416 - 242 - 5052
www.cialeasing.com

# அவுஸ்திரேலியாவில் குடியமர்வும்/ வேலைவாய்ப்பும்

Howard அரசாங்கம் பதவியேற்ற நாளிலிருந்து அவுஸ்திரேலியாவிற்கு புதிதாக குடிவரவாகும் மக்களின் தொகை (under family reunion program) அதிகரித்துக் கொண்டு போகிறது. இத்தொகை 2004ஆம் ஆண்டளவில் அதிகூடிய நிலையை அடையும் என எதிர்பார்க்கிறார்கள். அதேவேளை குடிவரவு மந்திரியின் புதிய திட்டத்தின் கீழ் தொழிலாளராக (skilld migrant) குடிவரவாகும் மக்களின் தொகையும் கூடிய நிலையை அடையும் எனவும் எதிர்பார்க்கிறார்கள். மனிதாபிமானமற்ற (non humanitarian) அடிப்படையில் குடிவரவாகும் குடிவரவாளர்களின் எண்ணிக்கை 110,000 ஆகவும் அத்தோடு மனிதபிமான அடிப்படையில் குடிவரவாகும் குடிவரவாளர்களின் எண்ணிக்கை 12,000 ஆகவும் இதில் அகதிநிலை கோருவோரிற்கு 4,000 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை NSW PREMIER, BOB CARR, மனிதாபிமானமற்ற முறையில் குடிவரவாகும் குடிவரவாளர்களின் எண்ணிக்கையை 80,000 ஆக குறைக்குமாறு குரல் எழுப்பியுள்ளார். .அவரின் குரலிற்கு முக்கிய காரணம் சிட்னி (Sydney) இன் சனத்தொகையை மட்டுப்படுத்துவதே ஆகும். அவரின் கூற்றுப்படி 40 வீதமான குடிவரவாளர்கள் சிட்னியை நிரந்தர வதிவிடமாக்கிக் கொள்கிறார்கள். அதாவது சிட்னியில் கிழமைக்கு 1,000 குடிவரவாளர்கள் குடியேறி வருகிறார்கள்.

ஆனால் 2003-2004 ஆண்டுக்குரிய புதிய குடிவரவாளர்களை குறிப்பிட்ட நகரின்




மத்தியை விட்டு ஏனைய இடங்களை (non metropolitan areas) நிரந்தர வதிவிடமாக்கி கொள்வதற்குரிய வழிமுறைகளை Mr. Ruddock முன்வைத்துள்ளார். இவற்றில் அந்த குறிப்பிட்ட இடங்களில் உள்ள பல்கலைகழகங்களில் அல்லது தொழில்நுட்ப கல்லூரியில் படிப்பதற்குரிய வசதிகளை அளிப்பதும் அந்த குறிப்பிட்ட இடங்களில் தொழில்வாய்ப்பு நிலைமைகளை அறிந்து அதற்குரிய தகமை கொண்ட தொழிலாளர்களை குடியமர்துவதாகும். இப்புதிய திட்டத்தின் கீழ் வெளிநாட்டு மாணவர்கள் நகரின் மத்தியை விட்டு சில குறிப்பிட்ட இடங்களில் அல்லது சில நகரங்களில் அதாவது Addelide, Darvin போன்ற இடங்களில் 2 வருடம் படிக்குமிடத்து அவர்களிற்கு நிரந்தர வதிவுடமை கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.

தற்போதைய அரசாங்கம் தொழிலாளர்களின் தேவைக்கேற்ப குடிவரவாகும் தொழில்நுட்பவியலாளர்களின் (skilled migrants) எண்ணிக்கையை 63,300 இருந்து 68,300 ஆக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்படி குடிவரவாகும் குடிவரவாளர்களினால் நாடு பல நன்மைக-ளைப் பெறக்கூடிய சந்தர்பங்கள் உருவாகும் என்று Mr. Ruddock கூறியுள்ளார்.

நாட்டின் தேவைக்குரிய தொழில் திறமை கொண்ட விண்ணபதாரருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. **இதில் கணினித்துறை (Computing) தாதிகள் (Nurses) மற்றும் மருத்துவம் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் அடங்குவார்கள்.**

கனடாவில் கணினித் துறையில் பட்டப்படிப்புப் பெற்று, தொழில் இல்லாமல் அவதிப்படுபவர்களுக்கு அவுஸ்திரேலியாவில் வேலை கிடைக்கலாமா?

இலவச முதலீடு (5%)- இப்பொழுது 100% வரை அடமானம் பெறலாம். NO FEE - LOWEST MORTGAGE RATE

**மோட்கேஜ் பெறுவது இலகுவாக்கப்பட்டுள்ளது!!!**

FREE DOWN PAYMENT OF 5% FOR THOSE IN NEED
NO FEE - LOWEST RATE - 100% FINANCING

CALL NOW FOR LATEST PROMOTIONS
* 2.25% வட்டி வீதம்



Rates as low as 2.25%
7% வரை பணம் பெறலாம்

Up to 7% cash back
NEW IMMIGRANTS, EI/WELFARE, FOREIGNERS ACCEPTED
RESIDENTIAL, BUSINESS, COMMERCIAL, CONSTRUCTION LOANS



- பணப் பிரச்சினையா? உங்கள் கடனை தீர்க்கும் வழியை நான் காட்டுகிறேன். Debt Consolidation Loan if you are in financial problems.
- உங்களின் மோட்கேஜை மாற்றுவதன் மூலம் குறிப்பிட்ட தொகை பணத்தை சேமிக்கலாம். Let me save you $$$ by switching your existing mortgagee to a lower interest rate.

**George** (MORTGAGE & LOAN SPECIALIST) - **905-294-6001**
**905 305 9952 Ext. 321, Cell: 416-450-9341**

INSURANCE

# காப்புறுதி

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

RBC Insurance

## உங்கள் காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு நம்பிக்கையான நிறுவனம்

நீங்கள் உங்களை ஆயுட் காப்புறுதி செய்வதன் மூலம் உங்கள் அன்புக்குரியவர்கள் எதிர்காலத்தில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படவும் தங்கள் உறுதியான வாழ்வைத் தொடரவும் நீங்கள் உதவி செய்கிறீர்கள். ஆயுள் காப்புறுதிகளில் பல வகைகள் உள்ளன. அவை பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

### தவணைக் காப்புறுதி TERM INSURANCE

### நிரந்தர ஆயுட் காப்புறுதி PERMANENT INSURANCE & GUARANTEED PAID UP OPTION WITH CASH VALUE

இந்தத் திட்டத்தின்படி உங்கள் ஆயுட்காலம்வரை திட்டம் நீடிக்கும். கட்டுப்பணம் எக்காலத்திலும் அதிகரிக்காது. இத் திட்டத்தில் நீங்கள் விரும்பியபடி 10, 15 அல்லது 20 வருடங்களில் உங்கள் காப்புறுதிக்கான முழுக் கட்டுப்பணத்தையும் செலுத்தி முடிக்கலாம். அதற்கான உத்தரவாதம் உங்கள் காப்புறுதிப் பத்திரத்தில் எழுத்தில் வழங்கப்படும்.

### வீட்டு அடமானக் காப்புறுதி MORTGAGE INSURANCE

வங்கியின்மூலம் கொடுக்கப்படும் ஈட்டுக் கடனுக்கான காப்புறுதித் திட்டத்திலும் பார்க்க, எங்கள் இலகுவான அடமானக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் உங்கள் விருப்பத்திற்கேற்ப உங்கள் வீட்டு அடமானக் காப்புறுதியை தெரிவு செய்வதால் உள்ள சில நன்மைகள்

* உங்கள் பலன் பெறுபவராக (Beneficiary) உங்களுக்கு விரும்பியவரை நீங்கள் தெரிவு செய்யலாம். (வங்கியின் பெயரைத் தெரிவு செய்ய வேண்டியதில்லை)

* அடமானக் கடனுக்காக வங்கியை மாற்ற நேரிட்டால் காப்புறுதித் திட்டத்தை மாற்றவேண்டிய அவசியமில்லை.

* காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டுப்பணம் எந்தக் கட்டத்திலும் அதிகரிக்காது
* உங்கள் அடமானக் காப்புறுதியை ஆயுள் காப்புறுதியாகவும் மாற்றலாம்.

### வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி NON MEDICAL INSURANCE

40 வயது தொடக்கம் 80 வயது வரையிலானவர்களுக்கு வைத்திய பரிசோதனையின்றி காப்புறுதி செய்யப்படும். பணக் கொடுப்பனவு உறுதி செய்யப்படும். நீரழிவு நோயாளர்களும் இதில் அடங்குவார்கள்.

### சிறுவர் கல்வி சேமிப்புத் திட்டம் R.E.S.P

உங்கள் குழந்தைகளின் எதிர்கால உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டத்தில் அரசாங்கம் வழங்கும் 20 வீத மானயத்துடன் எமது நிறுவனம் வழங்கும் 15 வீத போனஸ் ஆகியவற்றைப் பெற்று நன்மையடையுங்கள்.

### நோய் வருமுன் காக்கும் காப்புறுதி CRITICAL ILLNESS INSURANCE



**SRITHARAN THURAIRAJAH**
(Associate Life Underwriter)

**Cell: 416 918 9771**
**Tel: 416 297 6932**

OUR GUARANTEES ARE WRITTEN IN YOUR POLICY



# நாமும் நமது இல்லமும்
## 164

## முக்கிய அறிவித்தல்

இந்த மாதத்திலிருந்து எனது பழைய வியாபார நிறுவனத்திலிருந்து HomeLife / GTA Realty Inc. என்ற எனது நிறுவனத்திற்கு மாறுகின்றேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரியப்படுத்திக் கொள்கிறேன். எனது சேவை முன்னையதை விட சிறப்பாக அமையும் என உறுதி கூறுகின்றேன். எனது புதிய அலுவலக எண் : 416-321-6969

ராஜா மகேந்திரன்
(Vice President / Sales Rep.)
HomeLife / GTA Realty Inc.

வீட்டின் விலையில் இறக்கம் ஏற்படத் தொடங்கி விட்டதா, மோட்கேஜ் வட்டி வீதம் ஏறத்தொடங்கி விட்டதா? இரண்டு வினாக்களிற்கும் விடை தெரியாது? நீண்ட குளிர்காலத்தில் வீட்டின் வியாபாரத்தில் மந்தநிலை ஏற்பட்டது ஒரு பெரிய பாரதூரமான விழைவாகக் கொள்ளலாமா?

நீண்ட குளிர்காலம், நெடுநாளைய பழிவாங்கலின் முடிவான ஈராக் யுத்தம், சார்ஸ் (SARS) தொற்றுநோய் போன்றவற்றை நிச்சயமாக வடஅமெரிக்காவில் முக்கியமாக ரொறொன்ரோ மாநகரில் பொருளாதார இறக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை எவராலும் ஏற்றுக்கொள்ளாமல் விடமுடியாது. ரொறொன்ரோ பொருளாதாரத்தில் ஏற்கனவே பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த கட்டுரையை எழுதும்போது சார்ஸ் (SARS) தனது அதிகூடிய தாக்கத்திலிருந்து குறைந்து விட்டதாக அது சம்பந்தமான ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். உலகின் சுகாதார அமைப்பு (World Health Organization) ரொறொன்ரோவின் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதையும் ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே, இதுவரை பொருளாதார பாதிப்புகள் ஏற்பட்ட பகுதியை திருத்தி அமைக்க மூன்று நிலை அரசுகளும் தம்மால் இயன்றவற்றை ஆவன செய்கின்றன.

ஏற்கனவே சார்ஸ் இனால் பாதிக்கப்பட்டவர்களை தவிர புதிதாக பாதிக்கப்படுபவர்கள் குறைந்து வருவதாக மருத்துவ நிபுணர்கள் கூறியுள்ளார்கள். எனவே பொருளாதார பெரும் பாதிப்பில் இருந்து ரொறொன்ரோ மாநகரம் தப்பி விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈராக்கின் யுத்தம் குறுகிய காலத்தில் முடிவுற்றதும், பொருளாதார பாதிப்பை குறைக்கும் என எதிர்பார்க்கலாம். (உடனடி உதாரணமாக GAS விலையைக் கொள்ளலாம். ஒரு லீற்றரின் விலை 60¢ இற்குள் குறைந்ததைக் காணக்கூடியதாக உள்ளது.

### தற்போதைய வீட்டுச் சந்தையைப் பற்றிய சில குறிப்புகள்

வீடுகளின் சராசரி விலை, கனடாவில் அதிகரித்துள்ளது. கனடாவில் சராசரி வீட்டு விலை $201,662. இது ஒரு 8.6% அதிகரித்துள்ளது. சரித்திரத்தில் இதுவே முதல் தடவையாக $200,000 என்ற எல்லையை தாண்டியுள்ளது.

* இது ஆண்டு 1996 இலிருந்து வீட்டின் விலை அதிகரித்து கொண்டு வருவதைக் காட்டுகிறது. (கடந்த ஏழு வருடங்களாக விலை அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

**ராஜா மகேந்திரன்**

* அதற்கு முன்பாக 1989 இலிருந்து அதிகூடிய விலையை அடையாது, அடுத்த ஏழு வருடங்களும் வீட்டு விலை குறைந்து வந்ததை வாசகர் முன்பு எழுதிய கட்டுரைகளில் இருந்து அறிந்திருப்பீர்கள்.

ரொறொன்ரோவின் பெரும்பாகத்தில் (குறிப்பாக ரொறொன்ரோவில் வீடு விற்க / வாங்க சம்பந்தமாக இயங்கும் நிறுவனத்தின் (TREB) எல்லைக்குள்) வீட்டின் சராசரி விலை $292, 772 ஆக அதிகரித்துள்ளது. இந்த விலை சரித்திரத்தில் முன்பு இல்லாதளவிற்கு மிகக் கூடியதாகும்.

வீடுசம்பந்தமாக எதிர்வு கூறுபவர்களின் கூற்றின்படி, உலகிலும் கனடாவிலும் முக்கியமாக ரொறொன்ரோவிலும் பல விரும்பாத பொருளாதார நிகழ்வுகள் நடைபெற்றதாலும், வீட்டின் விலை அதிகரிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கின்றபடியால் ஆகக் குறைந்ததாக 5% அதிகரிப்பு ஆண்டு 2003இல் ஏற்படும் என எதிர்பார்க்கின்றார்கள்.

மேலும் எதிர்வு கூற்றின்படி, வட்டி வீதத்திலும் அதிகரிப்பு ஏற்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

கனடாவில் வீட்டின் சராசரி விலை $201,662
ஒன்ராரியோ " " " $225, 864
ரொறொன்ரோ பெரும்பாகம் " $292,772 (TREB)

* கனடிய GDP (Gross Domestic Product)
எதிர்பார்ப்பு (2003) 3.4%
(2004) 3.5%

**காப்புறுதித் தொகை**

| | | |
|---|---|---|
| 5% | முதலீடு | 3.75% |
| 10% | " | 2.50% |
| 15 | " | 2.00% |
| 20% | " | 1.25% |
| 25% | " | 0% |

**குறிப்பு**
இந்தக் காப்புறுதிக்கு 8% PST உள்ளதை நினைவில் கொள்க.


**CONDO FOR SALE**



- Neilson & MCLEVIN
- 2 Bedroom
- 2 Washroom
- Good Layout
- 1 Car parking
- Open Balcony
- Asking only $156,900.00

**HOUSE FOR SALE**



3 BEDROOMS
* 2 BEDROOMS
* 2 KITCHEN
*SIDE ENTRANCE *NEILSON & SHEPPARD
*PRICE $259, 000.00

**AN EXCELLENT 5 PLUS 2 BAY AUTO SERVICE GARAGE**

> CONVENIENT EAST END TORONTO LOCATION
> MECHANICAL ALIGNMENT & EMISSION TEST FACILITIES . ATTRACTIVE LEASE FOR THIS OVER 5200 FT UNIT FINANCIAL COULD BE ARRANGED
> EASY TO MANAGE THE BUSINESS OPERATION & SOLID CASH FLOW.

**BUILDING FOR SALE**

- Asking Price $729,000.00

**HOUSE FOR SALE**



- 3 BEDROOM
- 3 BEDROOM BSMT.
- SEP. ENTRANCE
- 2 KITCHEN
- BELLAMY & LAWRENCE
- Asking only $265,000.00

Raja M. Mahendran P.Eng.
T.P: 416-315-9397
Pager - 416-589-4270

| Interest | Rate |
|---|---|
| 5YrsMortgage | 5.20% |
| Prime rate | 4.75% |
| Bank rate | 3.00% |

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**ரவி நடராஜா**



**Accident & Traffic Ticket**
(14 Years Insurance Claims Experience)

* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
* உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

(416) 245-6555
2095 Weston Road, Suite 203, Toronto, ON
(416) 755-2801
2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON

**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**



Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12
Professional Photographer - கதிர்
416 - 750 - 8118
2381 Eglinton Ave., E., Kennedy / Eglinton, Scarborough

**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**

**MORTGAGES**



*Five Years closing mortgage rates (அடமானம்) 5.20% on $100,000.00 per month installment comes out $601.11. For different time period closing rates are given below*

*Mortgage Rates (மோட்கேஜ் வட்டி வீதம்)*

| Period | Rate of interest |
|---|---|
| 6 month | 4.55% |
| 1 Year | 3.90% |
| 2 Year | 4.50% |
| 3 Year | 4.65% |
| 4 Year | 4.85% |
| 5 Year | 5.25% |
| 7 Year | 5.90% |
| 10 Year | 6.15% |

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply




For more information call:
**Anil Joshi** at
**416.888.1072**

# மானிடம் மிளிர

மனிதர்களுள், உண்மையாளர்களும், பொய்யர்களும் நல்லவர்களும், கெட்டவர்களும், மேன்மக்களும், கயவர்களும் உடல் உறுப்பு, தோற்றம், அமைப்பு ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் சிறிதும் வேறுபாடின்றி ஒரே தன்மையராகவே காணப்படுகின்றனர். வெளித் தோற்றத்தினால் வேறுபாடு காண்பதே அரிது. இதனை "கயமை" என்ற அதிகாரத்தில் தெளிவாக விளக்கியுள்ளார் செந்நாப் போதர். 'மக்களே போல்வர் கயவர் அவர் அண்ண ஒப்பாரி யாங்கண்டதில்'.

அங்க அவயங்களாலும் தோற்றத்தாலும் பொல்லாதவர், நல்லவர்களை முழுக்க முழுக்க ஒத்திருப்பர். அதனைக் கண்டு ஏமாற்றம் அடைந்துவிடக் கூடாது. அது வெறும் வெளிப்பகட்டான ஒற்றுமை. இந்த ஒற்றுமை பெரிதும் விரும்பப்படும் ஒன்றல்ல. பண்பால் ஒத்திருப்பதே பயனுடையது, பாரட்டதக்கது. மனிதனை மகத்துவம் பெறச் செய்யக்கூடியது.

மக்களின் இனத்தில் ஆடு, மாடு, பன்றி, கழுதை, புலி, சிங்கம், கரடி, யானை, நரி, பாம்பு போன்றவை உள்ளன. மனிதர்கள் பலர் தோற்றத்தால் மனிதர்களாகக் காணப்பட்டாலும் செயலால் அருவருப்புள்ள பிராணிகளாகவே காணப்படுகின்றனர். அவர்கள் மனித உருவில் உள்ள மாக்கள். இந்த நிலையினை நாம் அன்றாட வாழ்க்கையில் நிதர்சனமாகக் காண்கின்றோம். இதனால் தான் குடும்பத்திலும், சமுதாயத்திலும், நாட்டிலும் சண்டைகளும், சச்சரவுகளும் குழப்பங்களும், கொலைகளும் அராஜகங்களும் ஏற்பட்டு அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டு விடுகின்றது. வாழ்க்கை வாழ்வதற்கே என்பது செயலிழந்து விடுவதுடன் வளமிளந்தும் விடுகின்றது. இதற்கு உதாரணமாக வள்ளலார் வாழ்வில் ஏற்பட்ட நிகழ்ச்சி ஒன்று வருமாறு.




திருவொற்றியூரில் ஒரு மகான் வெற்றுடம்போடு தெருவில் சுற்றிக் கொண்டிருந்தார். அவர் தம் கண்ணில் படும் மனிதர்களை எல்லாம் இதோ ஒரு நாய் போகின்றது. இதோ ஒரு பன்றி போகின்றது. இதோ ஒரு கழுதை போகின்றது என்று கூறிக்கொண்டிருந்தார். ஒரு நாள் அந்தப்பக்கமாக வள்ளலார் சென்றார். உடனே அந்த நிர்வாணத்துறவி இப்போது தான் இதோ ஒரு மனிதர் போகின்றார் என்று வியப்புடன் கூறிவிட்டு தான் வெற்றுடம்போடு இருந்ததற்காக வெட்கப்பட்டு விரைந்தோடி ஒளிந்து கொண்டார்.

**நா. க. சிவராமலிங்கம்**

இந்த நிகழ்ச்சி எதைக் காட்கின்றது. நாம் காணும் மக்களில் பலர் வெறும் உறுப்புக்களாலும் உருவத்தினாலும் மட்டுமே மனிதர்கள். ஆனால் உண்மையில் அவர்கள் மனிதர்கள் அல்லர். நற்குண நற்செயல்கள் பொருந்திய மனிதர்களே உண்மையான மனிதர்கள். அவர்கள் சிலரே எனற உண்மை புலப்படுகின்றது.

"என்கடன் பணி செய்து கிடப்பதே" என்று அப்பரடிகளும். "அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கிவிட்டு விட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும்" என்று தாயுமானவரும் கூறி இருப்பது மனிதப்பிறவி எடுத்ததன் நோக்கம் சேவையும் தொண்டும் பணியும் செய்வதற்கேயாம். இந்த அடிப்படையில் வாழ்கையை அமைத்துக் கொள்பவர் மனிதப் புனிதர்களேயாவர். குணம் என்றும் குன்றாச் சீர்மையர்? பிறர் வாழ நான் வாழ்கின்றேன். பிறருக்காக நான் வாழ்கின்றேன் என்பது உயர்ந்த வாழ்வியல் சிந்தனையாகும். இதுதான் உண்மையான மனிதனின் இயல்பு. இவ்வகையினர் நீதியையும் அறத்தையும் கடைப்பிடித்து வாழ்வர். அவர்களே சால்புடையவர்கள். அவர்களே பண்பு உடையவர். பண்பு உடையவர் இவர்கள்; மானிட மாணிக்கங்கள்.



"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் பண்பு பாரட்டும் உலகு" நட்புறவு கொள்ளலாம் பகைமை கொண்டு தீமையே செய்கிறவர்களிடத்தும் அன்பும், பரிவும் கொண்டிருந்தாலே சிறந்த பண்பு. இது தெய்வ குணம். இதனை ஒட்டியே பகைவனுக்கருள்வாய் நன்நெஞ்சே! என்று பாரதியார் கூறிப் போந்துள்ளார் போலும். காந்தியடிகளும் யேசுநாதரும் இதனை வாழ்ந்து காட்டியுள்ளனர். எனவே உருவத்தாலும் உள்ளத்தாலும் உண்மை மனிதர்களாக நாம் வாழ வேண்டும்.
நண்பு அற்றாராக நயமில் செய்வார்க்கும் பண்பு அற்றார் ஆதல் கடை.







## விளையாட்டுத் தகவல்கள் - 122 கிரிக்கெட்

### மின்னி மறையும் நட்சத்திரம் மைக்கேல் ஜோர்டான்



கூடைபந்தாட்ட வீரர் மைக்கேல் ஜோர்டான் ஐ சிறு குழந்தையில் இருந்து முதியோர் வரை அறிந்திருக்கும் புகழ் பெற்ற ஒரு நட்சத்திரம். கூடைப்பந்தாட்ட வீரர் வரிசையில் மெஜிக் ஜோன்சன் இன் பின்பு சாதனைகள் பல படைத்தவரும் கூடைப்பந்தாட்ட வீரர் வரிசையில் அதிக அளவு வெற்றிகளை பெற்ற மைக்கேல் ஜோர்டான், உலகமே வைத்த விழி மூடாமல் தொலைக்காட்சி பெட்டி முன்னிலையில் ரசிகர்களை அமர வைத்தவர் என்றால் மிகையாகாது.



**அமெரிக்க கூடைப் பந்தாட்ட வீரர் மைக்கேல் ஜோர்டான்**

உலகின் மிகச் சிறந்த கூடைப்பந்தாட்ட வீரராகக் கருதப்படும் மைக்கேல் ஜோர்டான் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஏப்ரில் 18ம் திகதி ஓய்வு பெற்றார். 1993இல் ஒரு முறையும், 1999இல் ஒரு முறையும் ஓய்வு பெறுவதாக அறிவித்தார் ஜோர்டான். எனினும், மீண்டும் விளையாட வந்த ஜோர்டான், இதுவே இறுதி அறிவிப்பு என்றார்.

ஃபிலடெல்பியாவில் புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் ஜோர்டான் விளையாடிய வாஷிங்டன் விஸார்ட்ஸ் அணி 87-107 என்ற கணக்கில் ஃபிலடெல்பியா அணியிடம் தோல்வி கண்டது. என்றாலும், ஆட்டம் முடிய ஒரு நிமிடம் 44 விநாடிகள் இருக்கையில் ஆடுகளத்தை விட்டு வெளியேறிய ஜோர்டானுக்கு முழு அரங்கமே ஆர்ப்பரித்து வழியனுப்பி வைத்தது.

தனது அணி 6 முறை NPA சாம்பியன் பட்டம் வெல்வதற்குக் காரணமானவரும், 5முறை சிறந்த வீரர் விருது பெற்றவரும், அமெரிக்கா 2 முறை ஒலிம்பிக் தங்கம் பெற காரண-மானவருமான ஜோர்டான் மொத்தத்தில் 32,292 புள்ளிகள் குவித்து கூடைப் பந்தாட்டத்தில் தனக்கென தனி இடத்தைப் பெற்றுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆனைக்ககும் அடிசறுக்கும்!**

**செரீனாவுக்கு அதிர்ச்சி அளித்தார் ஜஸ்டின் ஹெலனின்.**

அமெரிக்காவின் சார்லெஸ்டனில் நடைபெறும் ஃ பேமிலி சர்க்கிள் கோப்பை டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில், அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்சுக்கு பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் அதிர்ச்சித் தோல்வி அளித்தார்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ஹெனின் 6-3,6-4 என்ற நேர் செட்களில் வென்றார். இதற்கு முன்னர்,




தொடர்ந்து 21 ஆட்டங்களை வென்றுள்ள செரீனா, இந்த ஆண்டு பெற்றுள்ள முதல் தோல்வி இது. இதற்கு முன்னர், 2002 நவம்பரில் டூர் சாம்பியன் சிப்பில் பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டரிடம் செரீனா தோல்வியுற்றார்.

வழக்கம் போல முதல் செட்டில் தொடர்ந்து 3 விளையாட்டுக்களை செரீனா கைப்பிற்றினார். அதன் பின்னர் ஆட்டத்தின் போக்கு மாறியது. தொடர்ந்து 6 கேம்களை ஹெனின் வென்றார். 2வது செட்டிலும் 0-2 என்ற கணக்கில் பின்தங்கியிருந்து மீண்டு ஹெனின் வென்றார். தொடர்ந்து 4 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற செரீனா, 2003இல் தோல்வியே பெறமாட்டார் என்று பேசப்பட்டது குறிப்பிடப்பட்டது.

**சிறிலங்காவின் மகத்தான வீரர் அரவிந்த டி சில்வா!**

சர்வதேச கிரிக்கெட்டி லிருந்து இலங்கை வீரர் அரவிந்த டி சில்வா (37) ஓய்வுபெற்றுள்ளார். ஆனால் ஸ்ரீலங்கா அணியை தெரிவு செய்பவராக தரும் போது அமைப்பு குழுவில் நியமிக்கப்பட டுள்ளர். அவுஸ்திரேலியாவுடனான அரை இறுதி ஆட்டம் தான் அவரது கிரிக்கெட் வாழ்வின் கடைசி ஆட்டமாக அமைந்துவிட்டது.



**எஸ். கணேஷ்**

டி சில்வா, “அதுதான் கடைசி ஆட்டமாக இருக்கும் என நினைக்கவில்லை. அந்த நாள் எனக்கு மிகவும் உணர்ச்சிபூர்வமான நாள். அவுஸ்திரேலியாவின் 212 ஓட்டங்கள் என்பது அடையக் கூடிய ஒன்றுதான். ஆனால் கடுமையான உழைப்புக்குப் பிறகும் எங்களது துடுப்பாட்டம் சிறப்பாக அமையவில்லை” என்றார்.

டி சில்வா, இதுவரை 5 உலகக் கோப்பை போட்டிகளில் பங்கேற்றுள்ளார். மொத்தம் 1,064 ஓட்டங்கள் எடுத்துள்ளார். கடைசி ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி இருந்தால், பாகிஸ்தான் வீரர் ஜாவித் மியான்தத்தின் 1,083 ஓட்டங்கள் சாதனையை எட்டி இருந்திருக்க முடியும். அச்சாதனையை சச்சின் மட்டமே முறியடித்துள்ளார்.

டி சில்வா இதுவரை 308 ஒரு தின ஆட்டங்களில் 9,284 ஓட்டங்கள் எடுத்துள்ளார். உலகிலேயே இவரை விட சச்சின், அசாருதீன் மட்டுமே அதிக ஓட்டங்களை எடுத்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மட்டுமே 1,451 ஓட்டங்களை குவித்துள்ளார் டி சில்வா. சராசரியாக 50 ஐ நெருங்கி யுள்ளது. டெஸ்ட் ஆட்டங்களில் 6,361 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

டி சில்வா சிறந்த சுழல் பந்து வீச்சாளரும் கூட. அவர் ஒரு தின ஆட்டங்களில் 106 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி ஆட்டத்தில் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். 1996ல் உலகக் கோப்பை இறுதியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 107 ஓட்டங்களைக் குவித்தார் டி சில்வா. இந்த ஆட்டத்தால் எதிர்காலத்தில் அவர் நினைவு கூறப்படுவார்.


EDUCATION FUND SERVICES Inc.

The Children's Education Trust of Canada

குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம்

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் கனடா அரசாங்கத்தின் நன்கொடையை(20% Grant) பெற இன்றே நாடுங்கள்.

* டொலர் 10இல் இருந்து இத்திட்டத்தில் சேரலாம்!
* உங்கள் சேமிப்புக்கு உத்தரவாதம்!
* கல்வியை ஒருவராலும் களவாட முடியாது!



Siva Kanapathypillai
(Divisional Director)


சிறந்த சேவையையும், இலவச ஆலோசனைகளையும் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்:

416-438-0660 / 416-438-3578 Cell: 416-899-6044
Fax: 416-438-8532 Res: 905-472-1139
1200 Markham /Rd., Suite #301, Scarb., Ont.

முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்புக்கள் உண்டு.

வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற
VIVEKA
PRINTER



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்

80 BARBADOS BLVD., UNIT #4 SCAR., ON

416-410-6401

# சாதாரண மனிதனின் சிந்தனையிலிருந்து...



ஆசிரியர்
விளம்பரம் அவர்கட்கு,

உங்களது April 15, 2003 பத்திரிகையில் வெளியான "தன்மானம்" என்ற தனிமனிதனுடைய சிந்தனை (ஆக்கம் பரம் G.) மிகவும் தரம் குறைவாகவும், ஒற்றைப் போக்குச் சிந்தனை உடனும் எழுதப்பட்டுள்ளது. தரம் குறைவானது என்பதற்கு பல உதாரணங்களை கூற முடிந்தலும் ஒரேயொரு உதாரணத்தை மட்டும் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் கூறுகின்றேன்.

**"யார் இந்த அமெரிக்கர்கள்?"**

"------- அடிமைகளாகவும், ஆண்டிகளாகவும் நாதி அற்றவர்களாகவும் வந்தவர்கள் தான் இன்று அமெரிக்காவில் வாழும் அமெரிக்கர்கள்"

Well, நாம் தமிழர்கள் எவ்வாறு கனடாவிற்கு வந்தோம் என்பதை பரம் G. மறந்து விட்டாரா அல்லது விசேட விமானம் மூலம் அவர் கனடாவிற்கு பிரதம விருந்தாளியாக வந்திருக்கிறாரா?

சதாம் உசேனை ஆட்சியிலிருந்து அகற்ற, அமெரிக்கர்கள் தமது குடிமக்களது உயிரையும் பறிகொடுத்து, தமது பணத்தையும் செலவு செய்து ஈராக்கிய மக்களையும் kurds மக்களையும் விடுதலை செய்திருக்கிறார்கள். அவர்கள் ஈராக்கிய எண்ணையையும் பணத்தையும், தாம் செலவு செய்த காசிற்க்கு திரும்பப் பெற முயல்வதில் தவறு ஏதும் இல்லை.


நாம் தமிழர்கள் கொழும்பு வீதியிலிலே 1983 July அடிபட்டு ஓடியபோது அமெரிக்க அதிபர் போல யாராவது இலங்கை அரசை தட்டிக் கேட்டிருந்தால் இந்த நிலமை எமக்கு இன்று வந்திருக்குமா? பரம G. யை எதையும் தெளிவாக, இருபக்க நியாயவாதங்களை எடை போட்டு சிந்தித்து எழுதச் சொல்லுங்கள்

குணம் நாடி குற்றமும் நாடி, அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல் (குறள் 504)

இப்படிக்கு
தாழ்மையான


ரகுல் கனகரத்தினம்

**கருத்து சுதந்திரம்**



தனி மனித உரிமைகளை மதித்து மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்கப்படும் போது தான் கருத்துச் சுதந்திரம் பாதுகாக்கப்படு கின்றது. எமது கருத்துக்கு ஒத்து போகாத கருத்தை ஒருவர் கொண்டுள்ளார் என்றால் அதற்கான காரணங்கள் என்ன என்பதை அறிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அலசி ஆராயப்பட்டு பேசப்படும் போதுதான் மனிதர்களிடையே புரிந்துணர்வு உருவாகி மனித நேயத்திற்கு வழி பிறக்கின்றது. அதை விட்டு எமக்கு ஒத்துப் போகாத கருத்தைக் கொண்டவர்கள் முட்டாள்கள் என்று கொள்வோமேயானால் எம்மை நாமே முட்டாள்களாக்கி கொள்வதற்கு அது சமனாகும். உண்மைகள் மறைக்கப்படவும், உரிமைகள் மிதிக்கப்படவும் அது வழி வகுத்து விடுகின்றது. ஒரு விடயம் பற்றி எழுதப்படும் போது வாசித்து அதைப்பற்றி சிந்திக்கவேண்டும் என்று எண்ணப்படுகிறது. நீண்ட பாரதம் போல் எழுதி நேரத்தை வீணடித்தல் பிரயோசனமற்றது.

**தன்மானம்** :-கடந்த ஏப்பிரல் 15 விளம்பரம் பத்திரிகையில் எழுதப்பட்ட 'தன்மானம்' என்ற கட்டுரையில் சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு எதிர்மறையான கருத்தை கொண்ட வாசகர் ஒருவரின் கருத்தையே இந்தப் பகுதியில் முதலில் நீங்கள் படித்த கடிதம் சொன்னது. மற்றவர்களின் கருத்துக்கள் மதிக்கப்பட வேண்டும், மறைக்கப்படக் கூடாது என்பது விளம்பர ஆசிரியபீடம் கருத்தாக இருப்பதற்கு இது ஓர் எடுத்துகாட்டு ஆகும். அதே வேளை பரம் G. இன் கருத்துகளுக்கும் வாசகரின் கருத்துக்களுக்கும் உள்ள வேறுபாடுகளை இதை வாசிக்கின்ற வாசகர்களும் தெரிந்து கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. ஒரு விடயத்தை ஒவ்வொருவரும் எவ்வாறு பார்க்கின்றார்கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.



பரம் G. யை தெளிவாக, இருபக்க நியாயங்களையும் எடை போடச் சொல்லி புத்திமதி சொல்லி இருக்கும் அந்த பெரியவருக்கு தாழ்மையாக, அவன் சொல்லிக் கொள்வது எல்லாம், ஐயா, இருபக்க நியாயங்களையும் அதில் சொல்லி இருக்கின்றான். ஆனால் நீங்கள் தான் கவனிக்கத் தவறி விட்டீர்கள் என்பதை, அமெரிக்க அரசை பரம் G. குற்றம் கூறிவிட்டான் என்பது தான் உங்கள் தெளிவான கருத்து என்பதனை உங்களின் கடிதம் மூலம் உணர்ந்து கொள்கின்றான். பில்லாடன், சதாம் குசெய்ன் போன்றவர்களை வளர்த்து விட்டவர்களே அமெரிக்கர்கள்தான் என்ற உண்மையை நீங்கள் தெரிந்து கொள்ளாத பட்சத்தில் உங்களைக் குறைகூறிப் பயன் இல்லை. நீங்கள் உண்மை அறிய வேண்டுமாயின் CNN Cross Fire போன்ற தொலைகாட்சி சேவைகளில் நடைபெறும் இடதுசாரி, வலதுசாரி கட்சிகளின் வாதிப்பிரதி வாதங்களை கேட்பீர்களேயாயின் உண்மையை அறிந்து கொள்வீர்கள். பார்த்தீர்களா? அமெரிக்க தொலைக்காட்சி சேவைகளில் தமது சொந்த அரசாங் கங்கள் பற்றி விமர்சிக்கப்படுவதை அமெரிக்காவில் ஜனநாயகம், பத்திரிகை சுதந்திரம் கட்டிக் காக்கப்படுவதாகவும் இன்று தாம் செய்த பிழைகளை உணர்ந்து திருத்துவதற்காக-தான் ஆப்கானிஸ்தான் மீதும் ஈராக்மீதும் படை எடுத்திருக்கிறார்கள் என்று சொல்லி இருந்தான். இவை எல்லாம் அமெரிக்கா பற்றிய நல்ல விடயங்கள் இல்லையா? (தவறுகளை உணர்ந்து கொள்ளுதல்) உண்மையிலேயே ஈராக் மக்களை சதாம் இடம் இருந்து மீட்கத் தான் போர் தொடுத்தார்கள் என்று தான் வைத்துக் கொண்டால் அவர்களை வளர்த்துவிடாமல் விட்டு இருக் கலாமே. முன்பு சதாம் பின்லாடன் போன்றவர்கள் தேவைப்பட்டார்கள். இன்று இல்லை. பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டிய கதையாக அல்லவா ஈராக் மக்களை காப்பாற்றிய கதை இருக்கின்றது என்கிறான்.



1983 ஆடிக்கலவரத்தை நினைவு கூறி இருக்கின்றீர்கள். ஏன் அமெரிக்கா இலங்கை அரசை தட்டிக் கேட்கவில்லை என்று சிந்தித்துப்பார்த்தீர்களா? (தமிழ் மக்களின் உயிர் ஈராக்மக்களின் உயிருக்கு ஈடாகுமா) தமிழ்மக்கள் எல்லாவற்றையும் இழந்து நிர்கதியாகி LTTE ஒன்றுதான் கதிஎன்று இருக்க, உண்மைகளை அறிந்து இருந்தும் ஆடு நனைவதாக ஒநாய் அழுத கதையாக இலங்கை அரசுக்கு உதவி என்ற பெயரில் பல உதவிகளுடன் LTTE ஐ தடை செய்த கதையாவது உங்களுக்குத் தெரியுமா?

இன்றைய கால கட்டத்தில் ஈராக்கில் இருந்துவரும் முக்கிய செய்திகள் என்ன தெரியுமா? சிதைந்த ஈராக்கை கட்டி எழுப்பும் பணிமான வேலைகளுக்கான ஒப்பந்தம் அமெரிக்க ஸ்தாபனங்களுக்கு வழங்கப்படுகின்றனவாம். சதாம் வைத்திருந்த ஆயுதங்கள் பற்றிய கதையையே காணவில்லை. பக்தாத் நகரை குண்டு போட்டு அழித்ததற்கான காரணங்கள் தெளிவாக விளங்குகின்றன.

உங்கள் கடிதத்தில் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றி நீங்கள் ஒன்றும் அநுதாபம் தெரிவிக்காத படியினால் உங்களை ஒரு போர் வெறியன் என்று எடுப்பது அழகல்ல. அதேவேளை சதாம் ஒரு நல்லவன். அவனுக்கு எதிராக அமெரிக்கா போர் தொடுத்தது தான் பரம் G. இற்கு அமெரிக்கா மீது உள்ள வெறுப்பு என்று நீங்கள் எண்ணுவீர்களாக இருந்தால் அதற்கு பரம் G. பொறுப்பல்ல.

யார் இந்த அமெரிக்கர்கள்? அமெரிக்காவில் வந்தேறிய குடிமக்களின் வரலாறு தான் சொல்லப்பட்டது. அது இழிவானது என்று பரம் G. கருதவில்லை. உண்மையை சொல்லப்போனால் அமெரிக்காவை அவர்கள் கட்டி எழுப்பி வல்லரசு நாடாக வைத்திருப் பதற்கு அவர்களைப் பாரட்ட வேண்டும். சந்திரனை பார்த்து நாய் குரைத்த கதையாக மற்றைய நாடுகள் நடந்து கொள்வதும் தெரியும்.



அதற்காக அமெரிக்கா செய்வது எல்லாம் சரி என்று ஆமாம் சாமி போட வேண்டிய அவசியமில்லை. அதுவும் உண்மைகள் என்னவென்று தெளிவாக தெரியும் போது யார் அவன் பரம் G.? 1983 கலவரத்துக்கு முன் பொருளாதார அகதிகளாகவும் கல்வரத் திற்குப் பின் பாதிக்கப்பட்ட சிலருடன் பாதிக்கப்படாத பலராக கனடாவிற்கு வந்தேறிய வசதி கொண்ட தமிழ் அகதி களில் அவனும் ஒருவன் என்பதை ஒரு போதும் மறந்தவனல்ல. பைபிள், குர்ஆன், கீதை விவேகானந்தர், ஏன்? திருக்குறளில் எத்தனை குறள்கள் என்பதும் கூட அவனுக்கு தெளிவாகத் தெரியாது. படித்ததும் இல்லை. நல்ல மனிதனாக எப்படி வாழலாம் என்று அவை சொல்கின்றன என்று நம்பு கிறான். ஆனால் நல்ல மனிதனாக வாழ்வதற்கு அவற்றை **(தொடர்ச்சி 20ஆம் பக்கம்)**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஓம்

**ஸ்ரீநிவாஸ் நிலையம்**




**சகல இந்துமத கிரியைகள்**

- திருமணம்
- பூப்புனித நீராட்டுவிழா
- குடிபுகுதல்
- வியாபாரதோச பரிகாரங்கள்
- சமய சம்பந்தமான மங்கல வைபவங்கள்

சகல இந்துமதக் கிரியைகளும் ஆகம விதிமுறைப்படி செய்வதற்கு

**சர்வன் ஐயர்** (சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சர்வானந்தக் குருக்கள்)
**குகன் ஐயர்** (பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச குகனேஸ்வர சர்மா)
கனேடிய திருமணப் பதிவு அதிகாரி

**சர்வன் ஐயர் -** 416-609-0863, 416-292-0423
416-891-6360
**குகன் ஐயர் -** 416-292-6089



**விசேட வைபவங்களுக்கு (பிராமணாள்) சைவ உணவுகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்**

# ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

வாழ்வின் உச்சங்களை நாம் எட்ட விடாமல் தருபவை எம் கோபம், பொறாமை, ஆத்திரம், அகங்காரம் போன்ற எதிர்மறை உறவுகள் தாம் என்பதைப் புரிந்து அவற்றைத் தவிர்க்கக் கங்கணங் கட்டுங்கள்.

நாம் எமக்குள் புகுந்து எம்மையே அலசிப் பரிசோதித்த பின்பு தான் எம் ஒவ்வொருவருக்கும் உண்மையில் மூன்று முகங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இவற்றுள் முதலாவது மற்றவர்களுக்கு நான் வெளிக்காட்டும் முகம். இந்த முகம் எனது உயர்வை எல்லாம் எடுத்துக்காட்டும். எனது பலம், தைரியம், திறமை, கல்வியறிவு, அநுபவம், வெற்றி, தலைமைத்துவம், ஆத்மார்த்த சேவை போன்ற எல்லாவற்றையும் உள்ளடக்கியது இது. இவை மட்டும் தான் நான் என வெளி உலகிற்குக் காட்டும். இந்த உருவத்தைக் கட்டிப்பிடித்து வைத்திருக்கத்தான் நான் சதா படாத பாடுபடுகின்றேன்.

ஆனால் என்னுள் இன்னும் இரு வடிவங்கள் மறைந்து அடங்கியிருக்கின்றன. இரண்டாவதாக, ஒருவருக்குமே வெளிக்காட்ட விரும்பாது இரகசியமாக வைத்திருக்கும் எனது பலவீனங்கள் நிறைந்த முகத்தை நான் முடி மறைத்து வைத்திருக்கின்றேன். எனது இந்த உருவத்தில் சிகரங்கள் குறைவு. பள்ளங்கள் தான் அதிகம். எனது இரகசிய கீழ்த்தர சிந்தனைகள் ஆசை அபிலாசைகள் நான் உண்மையில் யார் என்பதைப் பற்றிய நம்பிக்கைகள், வெட்கப்பட வேண்டிய விசயங்கள் இதில் நிறைந்திருக்கும். இந்த முகத்தை நான் மற்றவர்களுக்குக் காட்டுவதில்லை. இத்தகைய என் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதுமில்லை. தைரியமின்றிப் பயப்படும் போது எனது இருண்ட நேரங்களில் கூடாத அநுபவங்களின்போது நான் இப்படித்தான். ஆனால் நான் விரும்பாவிட்டாலும் உண்மையான அநுபவக் கல்வியைக் கற்றுக்கொள்ள ஆளுமையை வளர்த்துக்கொள்ள என்னை வழிநடத்துவது எனது இந்த முகம் தான் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

எனது இந்த இரண்டாவது வரைபட முகத்தில் என்னையே நான் ஏமாற்றிக் கொள்ளும் மிக மோசமான வஞ்சகம் நிறைந்த அகங்காரமுள்ள பக்கமும் இருக்கின்றது. சுயநலம், பிற்போடுதல், சோம்பல், தார்மீகமற்ற தாழ்வான உணர்வுகள் நிறைந்த இக்குணங்களை என்னால் பார்க்கக்கூட முடியாது. ஆனால் இவை என்னுள் இருக்கின்றன. இந்தக் குகைகளின் அடிப்படையில் தான் தீய உணர்வுகள் எல்லாம் உருவாகின்றன. இந்த உண்மையை உணராமலே இந்த நற்பயனளிக்க முடியாத அத்திவாரத்தின் மேலே தான் என் தீய எண்ணங்கள்




